இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 06.12.2025

# திருவண்ணாமலையும் திருப்பரங்குன்றமும்!

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் கார்த்திகை தீபத் திருவிழா கடந்த 3 ஆம் தேதியன்று மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. '2,668 அடி உயர மலை உச்சியில் மகாதீபம் ஏற்றப்பட்டது, இலட்சக்கணக்கான பக்தர்கள் 'அரோகரா' கோஷத்துடன் தரிசனம்' என்று செய்தி வெளியிட்டுள்ளது 'தினத்தந்தி'. 'திருவண்ணாமலை மலை உச்சியில் மகா தீபம் ஏற்றம்' என்று படத்துடன் செய்தி வெளியிட்டுள்ளது 'தினமணி'. 1,024 கண்காணிப்பு கேமராக்கள் இருந்ததாகவும், 5 ஆயிரம் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டதாகவும் அந்த நாளிதழ் சொல்கிறது.

'திருவண்ணாமலையில் மஹா தீபம் – விண்ணதிர பக்தர்கள் 'அரோகரா' கோஷம்' என்று தலைப்பு போட்டுள்ளது 'தினமலர்'. 15 ஆயிரம் காவலர்கள் இருந்ததாகவும், முதல் முறையாக 500ஏஐ கேமராக்களும், 560 சாதாரண கேமராக்களுக்கும் வைக்கப்பட்டு இருந்ததாகவும், 26 பெரிய திரைகள் நகருக்குள் வைக்கப்பட்டதாகவும் சொல்கிறது 'தினமலர்'.

'இந்து தமிழ் திசை' நாளிதழின் தலைப்புச் செய்தியே திருவண்ணாமலைதான். 'மலை உச்சியில் மகா தீபம் கோலாகலம் - லட்சக்கணக்கான பக்தர்கள் தரிசனம், விடிய விடிய மழையில் கிரிவலம்' என்று தலைப்பு கொடுத்துள்ளார்கள். 3,500 கிலோ நெய், 1000 மீட்டர் திரி பயன்படுத்தப்பட்டதாகவும், மலை மீது ஏற்றப்பட்ட மகா தீபம் தொடர்ந்து 11 நாட்கள் பக்தர்களுக்குக் காட்சியளிக்கும் என்றும் சொல்கிறது 'இந்து தமிழ் திசை'.

இன்னொரு திசையில் இருக்கிறது, 'திருப்பரங்குன்றம்'. அங்கே திட்டமிட்டுக் கலவரத்தை உருவாக்கி இருக்கிறது பா.ஜ.க. ஆதரவுக் கும்பல்.

திருப்பரங்குன்றத்திலும் அமைதியாக கார்த்திகைத் திருவிழா நடைபெற்றது. மலை அடிவாரத்தில் முருகப்பெருமான் கோவில் இருக்கிறது. மலையின் நடுப்பகுதியில் பாரம்பர்ய தீபக் கம்பம் இருக்கிறது. அங்குதான் பல ஆண்டுகளாக கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டு வருகிறது. 19ஆம் நூற்றாண்டில் மலை உச்சியில் பிள்ளையார் கோவில் கட்டப்பட்டது. முந்தைய தூணை விட இது பெரிதாக இருப்பதால் இங்கு கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டு வருகிறது. அந்த இடத்தில் தீபம் ஏற்றப்பட்டு விட்டது.

கோவில்களைக் கைப்பற்றத் துடிக்கும் பா.ஜ.க. கும்பலுக்கு இது போல் அமைதியாக விழாக்கள் நடப்பதில் விருப்பம் இல்லை. கோபமாக இருக்கிறது. கோவில்களைத் தங்களது விருப்பத்துக்கு சூறையாட நினைக்கிறார்கள். அதனைத்தான் பல இடங்களில் நடத்த நினைக்கிறார்கள்.

**'தீபத் தூணில் தீபம் ஏற்ற அனுமதி மறுக்கப்படுகிறது' என்ற வதந்தியை பல காலமாகப் பரப்பி வருகிறார்கள். உண்மையில் இவர்கள் சொல்வது தீபத் தூண் அல்ல. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நில அளவைக்காக வைத்த தூணைத்தான் 'தீபத் தூண்' என்கிறார்கள்.**

**மலையில் இருக்கும் சிக்கந்தர் தர்க்காவுக்கும் முருகர் கோவிலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்த தர்க்காவுக்கு அருகில்தான் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்து நில அளவைத் தூண் இருக்கிறது. தர்க்காவுக்கு அருகில் இருக்கும் தூணில் தீபம் ஏற்ற வேண்டும், அதனால் குழப்பம் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் அவர்களது எண்ணம்.**

பிள்ளையார் கோவிலில் கார்த்திகை தீபம் கடந்த 3ஆம் தேதியன்று ஏற்றப்பட்டு விட்டது. 'அரசு, தீபம் ஏற்ற அனுமதிக்கவில்லை' என்பது மிகப்பெரிய பொய்யாகும். தீபம் ஏற்றப்பட்டு விட்டது.

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தர்க்கா உள்ளதால் மட்டுமே கலவரத்தைத் தூண்ட வேண்டும் என்ற நோக்கத்தில் இந்தக் கும்பல் பயன்படுத்துகிறது. இந்தப் பிரச்சினை பல காலமாக நடக்கிறது. குறிப்பாகச் சொன்னால் 1994 முதல் இதனை ஒரு பிரச்சினை ஆக்கி வருகிறது வகுப்புவாத அமைப்புகள்.

கார்த்திகை தீபம் ஏற்ற அரசு எந்தத் தடையும் விதிக்கவில்லை. பல்லாண்டுகளாக தீபம் ஏற்றப்படும் இடத்தை மாற்றிவிட்டு வேறு இடத்தில் ஏற்ற வேண்டும் என்று கேட்பதுதான் பிரச்சினையாக உள்ளது.

**1996ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், "உச்சிப்பிள்ளையார் கோவில் தீபத்தூணில் தீபம் ஏற்றும் இடம்தான் பாரம்பர்யமானது" என்று சொல்லப்பட்டு உள்ளது. 2014 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற அமர்விடம் கேட்ட ஆதாரங்களைத் தராததால் மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. 7.12.2017 ஆம் ஆண்டு வழங்கிய தீர்ப்பில், எங்கு தீபம் ஏற்ற வேண்டும் என்று சொல்லப்பட்டதோ, அதன்படிதான் அரசு செயல்பட்டு வருகிறது. 'தர்கா அருகில் உள்ள மலை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என்பதற்கான ஆகம ஆதாரம் ஏதும் இல்லை. அமைதி மற்றும் மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கத் தேவையில்லை' என்று தீர்ப்பு வந்தது. முந்தைய அமர்வு நீதிபதிகளின் தீர்ப்பை நீதிபதியே மதிக்காததை எதன் சீர்குலைவு என்று சொல்வது?**

திருவண்ணாமலையில் இலட்சக்கணக்கானவர் அமைதியாக கார்த்திகை தீபம் கண்டு வணங்கினார்கள். அதேநேரத்தில் திருப்பரங்குன்றத்தின் அமைதியைக் கெடுத்ததற்குப் பொறுப்பேற்க வேண்டியது யார்? அது யார் செய்த குற்றம் என்பதை பக்தர்கள் அறிய மாட்டார்களா?

**கார்த்திகை தீபத் திருவிழாவை திருவண்ணாமலையில் அமைதியாக நடத்தியது தி.மு.க. அரசு. திருப்பரங்குன்றத்தைக் கலவரப் பூமியாக மாற்றியது பா.ஜ.க. கும்பல். திருவண்ணாமலையில் இந்தளவுக்கு ஏற்பாடுகள் செய்து கொடுத்தவர்கள், திருப்பரங்குன்றத்தில் எதற்காகத் தடுக்கப் போகிறார்கள் என்பதை பக்தர்கள் சீர்தூக்கிப் பார்க்க மாட்டார்களா?**

பக்தர்களுக்கு இந்த இரண்டு காட்சிகளும் உண்மையை உணர்த்தும்.

**மதுரைக்கு 'எய்ம்ஸ்' கட்டவில்லை. மதுரைக்கு மெட்ரோ ரயில் கிடையாது என்று சொல்லி விட்டார்கள். அதை எல்லாம் மறைக்கப் போடும் நாடகங்கள்தான் இவை என்பதை உண்மையான பக்தர்கள் அறிவார்கள்.**

• •



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் அவர்கள் பிறந்தநாளை யொட்டி சந்தித்து, வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (5.12.2025) தலைமைச் செயலகத்தில், தெலங்கானா மாநில நீர்பாசனத் துறை அமைச்சர் உத்தம் குமார் ரெட்டி அவர்கள் சந்தித்து பேசினார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.12.2025) காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற் பூங்காவில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த கார்னிங் இண்டர்நேஷனல் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் இந்திய நாட்டைச் சேர்ந்த ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் லிமிடெட் நிறுவனங்களின் கூட்டு நிறுவனமான பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் (Bharat Innovative Glass Technologies Private Limited BIG TECH) நிறுவனம், 1003 கோடி ரூபாய் முதலீட்டில் 840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவியுள்ள மின்னணு சாதனங்களுக்கான உலகத்தரம் வாய்ந்த முன் கவர் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் திட்டத்தை தொடங்கி வைத்து, முன்கவர் கண்ணாடியில் கையெழுத்திட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் தா.மோ. அன்பரசன், செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.1003 கோடி முதலீட்டில் 840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு

# உலகத் தரத்தில் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலை!

## காஞ்சிபுரம் - பிள்ளைப்பாக்கத்தில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**காஞ்சிபுரம், டிச. 6 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.12.2025) காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற் பூங்காவில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த கார்னிங் இண்டர்நேஷனல் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் இந்திய நாட்டைச் சேர்ந்த ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் லிமிடெட் நிறுவனங்களின் கூட்டு நிறுவனமான பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் (Bharat Innovative Glass Technologies Private Limited - BIG TECH) நிறுவனம், 1003 கோடி ரூபாய் முதலீட்டில் 840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவியுள்ள மின்னணு சாதனங்களுக்கான உலகத்தரம் வாய்ந்த முன்கவர் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் திட்டத்தை தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், 2030க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்கும், தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றதில் இருந்து, அனைவரையும் உள்ளடக்கிய சீரான மற்றும் பரவலான வளர்ச்சி என்பதில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. மாநிலம் முழுவதும் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, அனைத்து மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சி மேம்பட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**கார்னிங் இண்டர்நேஷனல் நிறுவனம்!**

அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்ட கார்னிங் இண்டர்நேஷனல் நிறுவனம் ஃபார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும். கைபேசிகள், மடிக்கணினிகள் மற்றும் கைக்கணினிகளில் பயன்படுத்தப்படும் வலுவூட்டப்பட்ட "கார்னிங் கொரில்லா" கிளாஸ் உற்பத்தி மேற்கொள்ளும் நிறுவனம் ஆகும். ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் நிறுவனம், இந்தியாவில் கைபேசி உபபொருட்கள் மற்றும் மடிக்கணினி உற்பத்தியில் அனுபவம் வாய்ந்த நிறுவனம் ஆகும்.

பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (Bharat Innovative Glass Technologies Private Limited - BIGTECH)

**பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் நிறுவனம், கார்னிங் இண்டர்நேஷனல் கார்ப்பரேஷன் மற்றும் ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் கூட்டு நிறுவனமாகும்.**

இந்நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் பிள்ளைப் பாக்கம் தொழிற் பூங்காவில், 1003 கோடி ரூபாய் முதலீட்டில் 840 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், நவீன தொழில்நுட்பத்துடன் முன்கவர் கண்ணாடி (Front - cover glass) உற்பத்தி ஆலை அமைத்துள்ளது. இத்திட்டத்தில் உருவாக்கப்படும் பொருட்கள், நாட்டிலேயே முதன் முறையாக Precision glass processing தொழில் நுட்பத்தில் உற்பத்தி செய்யப்பட்டதாக இருக்கும்.

**இந்த திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மேற்கொள்ளப்பட்டு, அதே ஆண்டு ஜூன் மாதம், இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. அடிக்கல் நாட்டிவைத்த 17 மாதங்களில் இத்திட்டத்தின் உற்பத்தியை இன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் நிலவும் வணிகம் புரிதலுக்கான சூழலமைப்பு சிறப்பாக உள்ளதற்கு இது சிறந்த சான்றாகும்.**

இந்நிகழ்ச்சியின்போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்நிறுவனத்தில் பணியாற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் செல்வப்பெருந்தகை, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் பு.அலர்மேல்மங்கை, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், கார்னிங் நிறுவனத்தின் துணைத் தலைவர் ஆன்ட்ரு பெக், இயக்குநர் ரவிக்குமார் கட்டாரே, வணிக இயக்குநர் ஜோய் லீ, ICEA தலைவர் பங்கஜ் மொகிந்திரா, ஆப்டிமஸ் நிறுவனத்தின் தலைவர் அசோக் குப்தா, நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.12.2025) திருவண்ணாமலை மாவட்டத்தில் திருவண்ணாமலை – திருக்கோவிலூர் சாலையில் அமைக்கப்பட்டுள்ள மு.க.ஸ்டாலின் சுற்றுச் சூழல் சுற்றுலா பூங்காவினை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர் எ.வ.வேலு, தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., சி.என்.அண்ணாதுரை எம்.பி., எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, எஸ்.அம்பேத்குமார், பெ.சு.தி.சரவணன், ஓ.ஜோதி, மேயர் திருமதி நிர்மலாவேல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.